ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

අභිවෘද්ධි උපාය මාර්ග හා ජාත්‍යන්තර වෙළඳ අමාත්‍යාංශය

# பதவி வெற்றிடம்

## பணிப்பாளர் பதவி (கொள்கை மற்றும் உபாய திட்டமிடல்) - HM 1-1

இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்தவும் ஊக்குவிக்கவும் பொறுப்பாகவுள்ள, சர்வதேச வர்த்தகத்தினூடே நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதில் ஈடுபட்டுள்ள உயர்ஸ்தானத்திலுள்ள அரச நிறுவனமான இலங்கை ஏற்றுமதி சபையானது (EDB), தமது உயர் முகாமைத்துவக் குழுவில் இணைந்து கொள்வதற்கு மிகச் சிறந்த தலைமைத்துவ திறன்களுடன் கூடிய, சுறுசுறுப்பான மற்றும் சுயமாக இயங்க முடியுமான நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

### தொழில் விபரம்

EDB இன் திட்ட அமுலாக்கம் மற்றும் நிறுவன திட்டம் சகிதம் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு பொறுப்பாக இருத்தல், ஏற்றுமதிகளை பாதிக்கும் பாரிய பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு பொறுப்பேற்றல், அவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க கொள்கை ரீதியான நடவடிக்கைகளை சிபாரிசு செய்தல், உலக வர்த்தக ஸ்தாபனத்தின் (WTO) சட்டத்திட்டங்கள் மற்றும் பிராந்திய வர்த்தக குழுக்கள் தொடர்பாக, குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தில் நிகழும் மாற்றங்களின் தாக்கத்தை ஆராய்வதற்கு தகவல்களைத் திரட்டுவதை ஒருங்கிணைத்தல், இந்த பிரிவின் அனைத்து நிர்வாக மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகள் தொடர்பான அனைத்து புள்ளி விபரவியல் தரவுகளைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

### தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளியல்/சந்தைப்படுத்தல்/சர்வதேச தொடர்புகள்/வர்த்தகம்/விஞ்ஞானம்/கமத்தொழில்/வர்த்தக நிர்வாகம் அல்லது தொடர்புற்ற துறைகளில் ஓர் பட்டதாரிப் பட்டம் பெற்றிருப்பது விரும்பப்படுவதுடன் ஒரு அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தபானம்/சபையில் அல்லது ஒரு பிரசித்திபெற்ற தனியார் துறை நிறுவகமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது பதினைந்து (15) வருட தகைமைக்குப் பிந்திய அனுபவத்துடனான, தொடர்புற்ற துறையில், ஒரு பட்டப்பின் படிப்பு தகைமையைப் (முதுமாணி) பெற்றிருத்தல் வேண்டும்.

### வயது

50 வயதிற்கு கீழாக இருத்தல் வேண்டும் இருந்த போதிலும், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதி நிறுவகங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு இந்த உயர் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

### சம்பள அளவுத்திட்டம் (HM1-1)

ரூ.80,295/-15x2,270-ரூ.114,345/-

இலக்கம் 02/2016(1) DMS சுற்று நிருபத்தின் IIஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக குறித்த சம்பளம் வழங்கப்படும்.

### ஏனைய அனுகூலங்கள்

- அரசாங்க சுற்று நிருபங்கள் பிரகாரம் பணிக்காக ஒதுக்கப்படும் ஒரு வாகனம்
- மருத்துவ உதவி திட்டம்
- உபயோகிக்கப்படாத மருத்துவ விடுமுறை மற்றும் வருடாந்த போனஸ் தொடர்பில் பணம் வழங்கல்
- வீட்டுக் கடன் திட்டம் மற்றும் சலுகை வீத வட்டியுடன் கூடிய விபத்து கடன் வசதிகள்
- ஊசேநி-ஊழியர் 10%, சபை-15%, மற்றும் ஊ.ந.நி - சபை 3%

### விண்ணப்பிக்கும் முறை:

குறித்த விண்ணப்பமானது, EDB, லெவல் 5, HRM பிரிவு மூலமாகவும், www.srilankabusiness.com என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளப்படும் குறித்த படிவங்களிலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பங்கள், உரித்தான சான்றிதழ் பிரதிகளுடன், 2019.05.20 அன்று அல்லது அதற்கு முன்னதாக, EDBஇன் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றதிகாரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பதவியின் தலைப்பு, தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும். சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, உரித்தான நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாக, விண்ணப்பத்தின் ஒரு பிரதியை முன்னேற்பாடாக EDBஇற்கு அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
**NDB-EDB டவர்,**
**42, நவம் மாவத்தை, கொழும்பு -02**

தொ.பே: 011-2300700
பெக்ஸ்: 011-2300715